**ஆவிக்குரிய வரங்கள்**

**வாசிக்க**: 1**கொரிந்தியர்** 12:1-11

அன்றியும் சகோதரரே (பிள்ளைகளே), ஆவிக்குரிய வரங்களைக்குறித்து நீங்கள் அறியாதிருக்க எனக்கு மனதில்லை. என்று பவுல் சொல்கிறார். ஆவிக்குரிய வரம் என்றால் என்ன? ஒவ்வொர் நபரும் மனந்திரும்பி இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளும்போது தேவனுடைய நாமம் மகிமைப்படும்படி பிறருக்கு ஊழியம் செய்யவும், கிறிஸ்துவின் சபையை கட்டவும், ஒவ்வொருவருக்கும் பரிசுத்த ஆவியானவரால் கொடுக்கப்படும் ஓர் சிறப்பான திறமைதான் ஆவுக்குரிய வரம் ஆகும்.

ஆவிக்குரிய வரங்களை பற்றி.... நமது தகுதியின் அடிப்படையில் வரங்கள் கொடுக்கப்படாமல் தேவனுடைய கிருபையால் வரங்கள் கொடுக்கப்பட்டிருக்கிறது.

தேவனுடைய சித்தத்தின்படி வரங்கள் அளிக்கப்பட்டிருக்கிறது. எல்லா வரங்களும் மிக முக்கியமானவை. வரங்களை பெற்ற ஒவ்வொருவரும் தங்கள் வரத்தை பயன்படுத்த வேண்டும். வரங்களில் வித்தியாசங்கள் உண்டு. ஆனால் கிரியை செய்கிற ஆவியானவர் ஒருவரே.

ஆவிக்குரிய வரங்கள் கொடுக்கப்பட்டுள்ளதின் நோக்கம் தேவனுடைய நாமம் மகிமைப்படும்படியாகவும். பிறருடைய நன்மைக்காகவும், கிறிஸ்துவின் சபை வளர்ச்சிக்காகவும் கொடுக்கப்பட்டுள்ளது. எனவே, நம்முடைய சுய பெருமைக்காகவோ அல்லது சுய நன்மைக்காகவோ பயன்படுத்தக் கூடாது. யோவான் 15:8, 1பேதுரு 4:10 எபேசியர் 4:11-14.

ஆவிக்குரிய வரங்கள் பற்றிய உண்மையை இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டவர்கள் மட்டுமே ஆவிகுரிய வரங்களை உடையவராக இருப்பார்கள். யாரும் ஆவிக்குரிய வரங்களை சம்பாதித்து கொள்ளக்கூடாது. ஆவியானவர்தான் எனக்கு கிடைக்கும் வரத்தை தீர்மானிக்கிறார். ஒவ்வொரு இயேசு கிறிஸ்துவின் பிள்ளைகளும் குறைந்தது ஒரு வரத்தையாவது உடையவர்களாக இருப்பார்கள். உனக்குள் என்ன வரம் இருக்கிறதோ அதை வீணாக்குவது பாவமாகும் அதை பயன்படுத்த வேண்டும்.

ஆவிக்குரிய வரங்கள் தேவன் இலவசமாக கொடுப்பது. திறமை என்பது நாம் வளர்த்துக் கொள்வது. ஆவிக்குரிய வரங்கள் ஊழியத்துக்கு உபயோகமாக இருக்கும்.

ஆவியின் கனிகள் வாழ்க்கைக்கு உபயோகமாக இருக்கும். ஆவிக்குரிய வரங்கள் என்னிடத்தில் இருப்பதால் நான் மற்றவர்களைவிட பெரியவன் என்று நினைக்கக் கூடாது.

**கேள்விகள்**:

1. ஆவிக்குரிய வரம் என்றால் என்ன?

2. ஆவிக்குரிய வரங்கள் கொடுக்கப்பட்டுள்ளதின் நோக்கம் என்ன?

3. ஆவிக்குரிய வரங்கள் எதற்கு உபயோகமாக இருக்கும். ஆவியின் கனிகள் எதற்கு உபயோகமாக இருக்கும்?